உ

சிவமயம்



N. KALIF MAHA VIDYALAYA
LIBRARY
BOOK NO. 36
VALVETTITURAI

பொலிகண்டி

# பத்திரகாளி அம்பாள் ஊஞ்சல்

யாழ்/வலவை மகளிர் வித்தியாலயம்
வல்வெட்டித்துறை

யாழ்/வலவை மகளிர் வித்தியாலயம்
வல்வெட்டித்துறை

(Copy Right Reserved)

36
294.5

ஆக்கியோன்:
புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள்
யாழ்ப்பாணம்.

1965.

29 ~~14/8/84~~

உ

சிவமயம்

# பொலிகண்டி
# பத்திரகாளி அம்பாள் ஊஞ்சல்

யா/வலை மகளிர் வித்தியாலயம்
வல்வெட்டித்துறை

★

MAHALIR MAHA VIDYALAYAM
LIBRARY
BOOK NO. 30
VALVETTITURAI

தென்கோவை

பச்சையப்பா உடையா வளவு

**திருவாளர் சுப்பிரமணியம் நாகலிங்கம் அவர்களும்**

*பாரியாரும் விரும்பியவண்ணம்*

***புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்களால்***

*பாடப்பெற்றது.*

ஸ்ரீ லங்கா அச்சகம்
யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்

பொலிகண்டி

# பத்திரகாளி அம்பாள் ஆலயம்

## திருப்பணி விளக்கம்

அதிவீரசிங்க முதலியார் தோம்புக்காணி மருதாம்புலத்தில்; ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்குமுன் சிறு குடிலாக அம்பாள் ஆலயம் இருந்தது. அன்பர்கள் வழிபாடுசெய்துவர, அம்பாளுடைய அநுக்கிரகமும் பலருக்கு வெளிப்படுவதாயிற்று.

அதிவீரசிங்கமுதலியார் சந்ததியினராகிய வேலாயுதர் என்பவருடைய மகன், கந்தர், அவருடைய மகன் வேலுப்பிள்ளை. அவருடைய புண்ணிய புதல்வி தங்கம்மா என்பவர். இவர் முன்செய்த நல்வினைப்பயனால் இளமையிலிருந்து அம்பாளிடத்து அன்புடையராயினர். இவரைத் திருமணம் செய்தவர், தென்கோவை, பச்சை அப்பா உடையா வளவு, திருவாளர் சுப்பிரமணியம் நாகலிங்கம் என்பவர். தங்கம்மா அம்மையார், அம்பாள் ஆலயத்தைச் சிறப்பாக அமைக்கவேண்டும் என்னும் விருப்பத்தைக் கணவனரிடம் தெரிவித்தார். கருத்தொருமித்த தம்பதிகள் இருவரும், தங்கள் பொருள் கொண்டும், ஊரிலுள்ளோர் உதவியைக்கொண்டும் 1960-ம் ஆண்டு கார்த்திகை மீ திருப்பணி செய்யத்தொடங்கி, ஆலய அமைப்புக் கேற்றவகையில் நிறைவேற்றி வருகின்றனர். அம்பாள் திருவுள்ளக் கருணையே இவற்றையெல்லாம் இயக்கிவருகின்றது என்பதை நாமெல்லோரும் தெளிந்து கொள்வோமாக.

உ
சிவமயம்

# பொலிகண்டி பத்திரகாளி அம்பாள்
# ஊஞ்சல்

## காப்பு

உலகவுரு விராட்டினிடை நாடி யாக
உயர்தீர்த்தம் மூர்த்திதல மகிமை வாய்ந்த
நலம்நிலவு மிலங்கையினில் யாழ்ப்பா ணத்தில்
நாடுபொலி கண்டியினற் கோவில் கொண்ட
திலகநுதற் பத்திரகா ளித்தாய் மீது
செந்தமிழால் ஊஞ்சலிசை யடியேன் பாட
கலபமயி லவன்முன்னோன் ஐங்க ரன்சீர்க்
கணபதிதன் கழலிணைகள் காப்ப தாமே.

## பதிகம்

சரியைமுதல் நாற்பாதம் தூண நாட்டி
தருமம்முதல் நாற்பயனும் விட்டம் பூட்டி
தெரிவரிய பவளத்தின் தாம்பு மாட்டி
சித்திரங்க ளமைதருமேற் கட்டி கூட்டி
விரியுமறை முதற்குடிலைப் பீடம் காட்டி
மெய்யன்பர் போற்றவவர் பவங்கள் வீட்டி
அரியபொலி கண்டிதிருக் கோயில் வாழும்
அருட்பத்ர காளியம்மே ஆடீ ரூஞ்சல். 1

திருமுடியும் திருநுதலிற் றிலகம் தூய
செய்யமாதுளை முத்திற் றிகழ்முக் கண்ணும்
வருபவள வாய்முத்த நகையும் வாய்ந்த
வலம்புரியிற் றிருக்கழுத்தும் பூணூல் மார்பும்
தருபுலியி னதளுடையும் உடுக்குப் பாசம்
தாங்கியமேற் கரங்களும்கீழ்க் கரங்கள் சூலம்
அருகுகபா லந்தாங்கும் உருவம் கொண்ட
அருட்பத்ர காளியம்மே ஆடீ ரூஞ்சல். 2

கந்தனுறை கந்தவனக் கடவை தென்பால்
கருணையுருப் பாலாவி தீர்த்தம் மேல்பால்
சந்தவிசை யொலிகடல்தான் வடபா லாக
தருவெனலாம் பனந்தோப்பெப் பாலு மாக
வந்தமல ரிலுப்பைதல விருட்ச மாக
வளமாரும் பொலிகண்டிக் கோயில் வாழும்
அந்தமிலான் சத்தியுமை அமிச மான
அருட்பத்ர காளியம்மே ஆடீ ரூஞ்சல். 3

பரவுவா ரிமையவர்விஞ் சையர்கள் போற்ற
பணிவினொடு கந்தருவர் கீதம் சாற்ற
விரவுவா ரடியர்தமி ழிசையாற் போற்ற
வேண்டுபணி புரிபவர்நின் பூசை யாற்ற
சுரமகளிர் பவளவடம் கரந்தொட் டாட்ட
தூயபொலி கண்டிதிருக் கோவில் வாழும்
அரனுருவாம் வீரபத் திரனார் தேவி
அருட்பத்ர காளியம்மே ஆடீ ரூஞ்சல். 4

வேண்டிவரம் பெறுவார்நின் நீல மேனி
மேவியகிண் கிணிமாலை யொலியைக் கேட்டு
தாண்டவமும் தம்மைமறந் தியற்று நிற்ப
தையலவர் கைகுவித்துத் தங்கண் ணோக்க
பூண்டதவ முனிவரரும் புடைநின் றேத்த
புனிதபொலி கண்டிதிருக் கோயில் வாழும்
ஆண்டவனும் வீரபத் திரனார் தேவி
அருட்பத்ர காளியம்மே ஆடீ ரூஞ்சல். 5

பன்னுமறை யந்தணர்கள் பாங்காய் நின்று
பகர்தரு மந்திரமலரால் அருச்சித் தேத்த
சொன்னமுதற் காணிக்கை சொரிவார் நின்னைத்
தோத்திரஞ்செய் துளமுருகிச் சூழா நிற்ப
கன்னியர்கள் கவரிபுடை விரட்ட வாளும்
கையேந்திக் காளியினம் கவிகை தாங்க
அன்னநடை யவர்பாடிகம் பூந்தட் டேந்த
அருட்பத்ர காளியம்மே ஆடீ ரூஞ்சல். 6

கற்பகமாம் பனந்தோப்புச் சூழல் மேவிக்
கவினுமரு தாம்புலத்துக் கோயில் கொண்டாய்
உற்பவமா முயிர்க்கருள்வான் பறைதன் அம்ச
உருவாளுய் அரனிடத்தா ளருளும் கண்டாய்
பொற்புமிகு நீலமணி மேனித் தாயே
பூதிகண்டி யணிபவர்தம் வினையும் விண்டாய்
அற்புதமாய் அரம்பையர்கள் வடந்தொட் டாட்ட
அருட்பத்ர காளியம்மே ஆடீ ரூஞ்சல். 7

தக்கனார் வேள்விதகர்த் தவன்றன் தேவி
தங்குமுயிர் களுக்கெல்லாம் தாயாய் மேவி
முக்கணனார் திருநடன முன்னின் றுடி
மூவிரண்டு முகமுடையான் முதன்மை நாடி
பக்கமாங் கந்தவனக் கடவை தேடிப்
பாங்குபொலி கண்டிதிருக் கோவில் வாழும்
அக்கமலர் அரிவையர்கள் வடந்தொட் டாட்ட
அருட்பத்ர காளியம்மே ஆடீ ரூஞ்சல். 8

சத்தியுருக் காளியம்பாள் ஆடீ ரூஞ்சல்
சஞ்சலம்தீர்த் தருள்பவளே ஆடீ ரூஞ்சல்
வித்தகமாம் கிண்கிணியாய் ஆடீ ரூஞ்சல்
வீரபத் திரன்தேவி ஆடீ ரூஞ்சல்
உத்தமமாம் பூணூலாய் ஆடீ ரூஞ்சல்
உயர்சிங்க வாகனத்தாய் ஆடீ ரூஞ்சல்
அத்தபுலித் தோலுடையாய் ஆடீ ரூஞ்சல்
அருட்பத்ர காளியம்மே ஆடீ ரூஞ்சல் 9

மறைவாழி அந்தணர்ஆன் இமையோர் வாழி
மன்னுசைவத் திருமுறையும் தமிழும் வாழி
இறைவாழி அரசுமுறை நெறியாய் வாழி
இன்பமிகு பூதிகண்டி சைவம் வாழி
நிறைவாழி மாதர் மக்கள் நீதி வாழி
நிலவுமழை பொழிந்துவளம் நிறைந்து வாழி
உறைவாரும் பத்திரகா ளியம்மன் கோவில்
உபயமலர்த் திருவடிகள் வாழி வாழி. 10

ஊஞ்சல் பதிகம் முற்றிற்று.

வாழ்க பத்திர காளி மலர்ப்பதம்
வாழ்க செம்மை மனத்தொடு மாந்தர்கள்
வாழ்க சைவம் மலர்ந்தொளி நீற்றணி
வாழ்க மெய்யடி யார்கள் உலகெலாம்.

சுபம்.

யா/வலவை மகளிர் வித்தியா...
வல்வெட்டித்துறை.

உ

ஆக்கியோன்:

பண்டிதர் சங்கரப்பிள்ளை இராமச்சந்திரன் அவர்கள்
ஆடியபாத ரோட், நல்லூர்.

## வருகை

.1 சுழலு மண்டத் தொகுதியெல்லாந்
தொட்டி லாக வத்தொட்டில்
தோன்றி வளரு முயிர்களங்கு
துயில் கொண்டிடுமுன் சேயாக

அழகா ரன்போ டருட்கொங்கை
அவைசேர் பாலா மானந்தத்
தமிழ்தம் புகட்டி யவைகளைத்தா
லாட்டுந் திரோத மாகியொளிர்

தழல்சேர்வேள்வி தனிற் றக்கன்
தலையைத் தகரின் தலையாக்கித்
தருக்கான் மிக்கோர் தமக்குரிய
தண்டம் புரியும் தலைவனுடன்

பழகிப் பாகத் தமர்ந்துலகம்
பாலித் தருளும் பத்திரையே
பக்தர் பரவப் பொலிகண்டி
பயில்வாய் வருக வருகவே.

2\. அடியா ரன்புக் கரநீட்டி
அம்மா வர்வா எனவழைக்க
அருகே சென்றுன் னருட்கரத்தா
லணைத்து மடிமீ திருத்தியவர்

குடியா நிற்கப் பேரின்பங்
குழைத்த தீம்பால் கொடுத்தவர்கள்
குதலைத் துதியுஞ் செவிமடுத்துக்
குழவிப் பருவங் கடக்கமலம்

விடியா நிற்கும் பொழுதறிவு
விளங்கக் காட்டிப் பேரின்ப
வீட்டி லவரைக் குடிபுகுத்தும்
விமலாய் வருக மெய்ஞ்ஞானப்

பொடியார் மேனிப் புண்ணியனார்
புதல்வன் வீர பத்திரன்பாற்
பொலிவா யிங்கு பொலிகண்டி
புகுந்தாய் வருக வருகவே.

3\. செய்யுந் தொழிற்குஞ் சிந்தனைக்குஞ்
சிறந்த வூற்று நீயேயாய்ச்
சேர்த லறியார்ச் சிறியேமைத்
தினமும் புரக்கத் திருவுளங்கொண்

டெய்தும் பவநோய் விலக்கிடுதற்
கேற்ற மருந்தாந் திருவருளு
மெமக்கே யாகக் கொண்டதனுக்
கியைந்த விதியாம் பத்தியமும்

மெய்யே காத்துப் பேரின்பம்
மேவுஞ் சுகவாழ் வெமக்கருளும்
வீரத் தாயே வருகநிதம்
வேண்டு மன்பர்க் கருள்சுரந்து.

பொய்யே தீர மெய்ஞ்ஞானம்
புணர்ப்போய் வருக பொங்குதமிழ்ப்
புலவோர் போற்றப் பொலிகண்டி
புகுந்தாய் வருக வருகவே.

4. உள்ளத் தடத்தி லார்வமலை
யூறிப் பாயு மன்பருவி
யுயர்நீர் தேக்கி யதற்குள்ளே
யூன்றும் பக்தி நம்பிக்கை

கொள்ளுங் கமலக் கொடியாகக்
கூட்டி வளர்க்கு மன்பருக்குக்
கொழுந்தா தாகுந் திருவருளைக்
குழைத்துப் பாய்ந்து கொப்பளிக்கும்

வெற்றச் செழுந்தே னானந்தம்
விரைந்து சுரந்து விரிகதிராய்
மேவும்வீர பத்திரன் பால்
விளங்கு மொழியால் முறுவலிதழ்

விள்ளும் மலரே வருகவுயர்
வேதப் பொருளே வருகநிதம்
மேலோர் போற்றப் பொலிகண்டி
மீதிங் கமர்ந்தாய் வருகவே

வல்வெட்டித்துறை

5. அன்புக் கவியா லுனையடியா
ரபிடேகஞ் செய்தாங் கொழுகி
யாறாய்ப் பெருகி யருட்சுவையும்
அன்பா மணமு மளைந்துவரு

மின்பப் புனல்கொண் டெம்முடைய
இருகாதுகளின் வழி யெங்க
ளிதயங் கழுவி யிடுதலினங்
கிருளாய்ச் சேரு மலமகல

நின்பொற் பதமேகதி யெனுநன்
னினைவா மொளிசற் றுதித்தலினால்
நெறிநீ யருள்கென் றுன்னுமம்
நெஞ்சி னினைந்தே நீடுதமிழ்

தன்சொற் றொடையிற் சாற்றியுனைத்
தலையால் வணங்க எமக்கெல்லாந்
தாயே வருக பொலிகண்டி
தழைப்பாய் 'வருக வருகவே.

௮

## கரகம்

பொலிகண்டி குடிகொண்டாய் எங்கள்பத்ர
காளியம்மா எங்கள் பத்திரகாளி
புதுமைமிக்க அம்பிகையே எங்கள் பத்ர
காளியம்மா எங்கள் பத்ரகாளி
கலியாவுந் தீர்த்தருள்வாய் எங்கள் பத்ர
காளியம்மா எங்கள் பத்ரகாளி
கரகமாடிப் பாடுகின்றோம் எங்கள்பத்ர
காளியம்மா எங்கள் பத்ரகாளி. 1.

சிந்தனையில் வந்துதிப்பாய் எங்கள் பத்ர
காளியம்மா எங்கள் பத்ரகாளி
சிறுவரென்றே எமைவளர்ப்பாய் எங்கள்பத்ர
காளியம்மா எங்கள் பத்ரகாளி
வந்தனைசெய் தேநின்னை எங்கள் பத்ர
காளியம்மா எங்கள் பத்ரகாளி
வாயார வாழ்த்துகின்றோம் எங்கள் பத்ர
காளியம்மா எங்கள் பத்ரகாளி. 2.

கண்கண்ட தெய்வம்நீ எங்கள் பத்ர
காளியம்மா எங்கள் பத்ரகாளி
காப்பதில்நீ ஐயமுண்டோ எங்கள் பத்ர
காளியம்மா எங்கள் பத்ரகாளி
எண்கண்ட அண்டமெல்லாம் எங்கள் பத்ர
காளியம்மா எங்கள் பத்ரகாளி
இமைப்பொழுதில் ஆக்கி வைப்பாய்
எங்கள் பத்ரகாளியம்மா எங்கள் பத்ரகாளி. 3.

பனைமேவு பொலிகண்டி எங்கள்பத்ர
காளியம்மா எங்கள் பத்ரகாளி
பத்தருக்காக் குடிகொண்டாய் எங்கள் பத்ர
காளியம்மா எங்கள் பத்ரகாளி
உனைநாளும் பாடிடுவோம் எங்கள் பத்ர
காளியம்மா எங்கள் பத்ரகாளி
உயர்கருணை தந்திடுவாய் எங்கள் பத்ர
காளியம்மா எங்கள் பத்ரகாளி. 4.

சுபம்.

உ
சிவமயம்

# பத்திரகாளி அம்பாள்

ஆக்கியோன் :

திருவாளர் சுப்பிரமணியம் நாகலிங்கம்

தென்கோவை, பச்சையப்பா உடையாவளவு, கோப்பாய் P. O.

பராசக்தி ஜெயசக்தி தேவி! ஓம் சுத்த
பராசக்தி ஜெயசக்தி பொலிகண்டி தேவி!

1. திருநுதற் றிலகமும் சூட்டி — தேவி
கருணையை வேண்டி கருத்துருகி நின்றேம்
அருட்பத்திர காளித்தாய் அம்மே — எங்கள்
ஆர்வக் கொழுந்தே அழகான தேவி (பராசக்தி)

2. ஆனந்த சிங்க மீதேறி — மலை
அருவிபோல் ஆடித் தவழ்ந்தோடி வருவாய்
வானமின் போலே வருவாய் — எங்கள்
வாழ்வுப் பயிருக்கு மழைபோல் வருவாய் (பராசக்தி)

3. ஓம்சுத்தி சிவசக்தி தாயே — எங்கள்
உள்ளத் துடிப்பிலே துள்ளிநீ வருவாய்
நாம் வேறு நீவேறிலாதே — எங்கள்
நல்லுயிர்க் குயிராக உள்ளநீ வாவா (பராசக்தி)

4. தக்கனுர் வேள்வி தகர்த்தாய் — எம்மை
சஞ்சலஞ் செய்வினை தம்மைநீ கில்லாய்
நக்கனுர் புத்திர ஞகி — வளர்
நம்வீரபத்திர னற்றுணை யாவாய் — ஆசை (பராசக்தி)

5. அவமான சிந்தைக ளின்றி — என்றும்
அழிகாம நோயின்றி எழிலோங்க வருவாய்
சிவமான நவமான வாழ்வை — இங்கு
திருவோங்க நாட்டுவாய் பத்ரகாளித் தாய் (பராசக்தி)

6. ஆங்காரத் தக்கனை வீழ்த்தி — பூவில்
அறமோங்க உபசாந்த வரமோங்க வருவாய்
ஓங்கார பத்திரை தேவி — எங்கள்
உள்ளத்தில் அருள்வெள்ளமாய் ஓடி வாவா (பராசக்தி)

7. கைவந்த கனிபோல உதவி — மனக்
கவலையை மாற்றும் கருணைச் சேர்த்திச்
சைவந் தழைத்தோங்க வாவா — மனச்
சாந்தந் தழைக்கத் தயைசெய்து வாவா. (பராசக்தி)

8. உலகாக விளையாடு தேவி — அன்பர்
உளமான சோலையில் உலாவிடும் அம்மா
கலையாக வளர்கின்ற தேவி — சக்திக்
கனலாகி வினை போக்கிக் காபத்ரகாளி (பராசக்தி)

௨

## எங்கள் பத்திரகாளி

1. நான்குகைகளை உடையவளே எங்கள் பத்திரகாளி
மூன்று கண்களை உடையவளே எங்கள் பத்திரகாளி
மாதுளமுத்துப் போன்ற கண்களை உடையவளே
எங்கள் பத்திரகாளி
தூயர்மனம் கோவில் கொள்பவளே எங்கள் பத்திரகாளி
இரண்டுகால்களை உடையவளே எங்கள் பத்திரகாளி
தாயின்மிகப் பரிவுடையவளே எங்கள் பத்திரகாளி
மேல்நோக்கிய கேசங்கள் உடையவளே
எங்கள் பத்திரகாளி
துன்பமெலாந் துடைத்திடுபவளே எங்கள் பத்திரகாளி
வீரபத்திரரின் தேவியானவளே எங்கள் பத்திரகாளி
மருதாம் புலத்தவளே எங்கள் பத்திரகாளி
பொலிகண்டியில் கோயில் கொண்டவளே
எங்கள் பத்திரகாளி

2. நீலநிற மேனியாள் எங்கள் பத்திரகாளி
அன்பர் மனம் நிறைந்திருப்பாள் எங்கள் பத்திரகாளி
லோகமெலாம் காத்திடுவாள் எங்கள் பத்திரகாளி
புலித்தோ லுடையாள் எங்கள் பத்திரகாளி
இன்பமெலாந் தந்திடுவாள் எங்கள் பத்திரகாளி
இன்றென்முன்னே வந்திடுவாள் எங்கள் பத்திரகாளி
மேதினியை வாழவைப்பாள் எங்கள் பத்திரகாளி
பொலிகண்டியில் கோவில்கொண்டாள்
எங்கள் பத்திரகாளி

3. காட்டுவழி செல்லும்போதும் எங்கள் பத்திரகாளி
கடல்மேலே செல்லும் போதும் எங்கள் பத்திரகாளி
கண்களைக் காக்கும் இமையே போல்வாள்
எங்கள் பத்திரகாளி
கட்டழகி கண்கவர்வாள் எங்கள் பத்திரகாளி
கண்ணின் மணிபோன்றவளே எங்கள் பத்திரகாளி

போர்முனையில் வீரசக்தி எங்கள் பத்திரகாளி
நோய்முனையில் ஔசதமாம் எங்கள் பத்திரகாளி
ஆதிசிவன் அருட்சக்தி எங்கள் பத்திரகாளி
மருதாம் புலத்தில் கோவில் கொண்டாள்
எங்கள் பத்திரகாளி

4. அறவேள்வி செய்வோர்க்கு எங்கள் பத்திரகாளி
ஆற்றலெல்லாந் தந்திடுவாள் எங்கள் பத்திரகாளி
இம்மையிலும் மறுமையிலும் எங்கள் பத்திரகாளி
ஈடில்லாத் துணையாய் நிற்பாள் எங்கள் பத்திரகாளி
உலகெல்லாம் உவந்தேத்தும் எங்கள் பத்திரகாளி
ஊழ்வினையைக் கெடுத்திடுவாள் எங்கள் பத்திரகாளி
ஒரு பொருளும் உணர்ந்திலனே எங்கள் பத்திரகாளி
ஓடியென்முன் வந்திடுவாய் எங்கள் பத்திரகாளி
பொலிகண்டியில் கோவில்கொண்டாள்
எங்கள் பத்திரகாளி
மேதினியை வாழவைப்பாள் எங்கள் பத்திரகாளி

5. அன்பர்பணி செய்யவெனை எங்கள் பத்திரகாளி
ஆளாக்கி விட்டுவிட்டாள் எங்கள் பத்திரகாளி
இல்வாழ்வின் பேற்றையெல்லாம் எங்கள் பத்திரகாளி
ஈவாராற் காட்டிடுவாள் எங்கள் பத்திரகாளி
உழவர்களின் வாழ்வினிலே எங்கள் பத்திரகாளி
ஊரையெல்லாம் வாழவைப்பாள் எங்கள் பத்திரகாளி
எத்திசைதான் நோக்கிடினும் எங்கள் பத்திரகாளி
ஏவல்செய்வார் பக்தர்குழாம் எங்கள் பத்திரகாளி
ஐயமில்லை அச்சமில்லை எங்கள் பத்திரகாளி
ஒருபொழுதும் உனைமறவோம் எங்கள் பத்திரகாளி
ஓடோடி வந்தாள்வாய் எங்கள் பத்திரகாளி
பொலிகண்டியில் கோவில்கொண்டாள்
எங்கள் பத்திரகாளி
மேதினியை வாழவைப்பாள் எங்கள் பத்திரகாளி
மருதாம் புலத்தாவாள் எங்கள் பத்திரகாளி

சுபம்.

யா/[illegible] மகளிர் வித்தியாலயம்

யா/வலவை [illegible] வித்தியாலயம்
வல்வெட்டித்துறை

ஸ்ரீ லங்கா அச்சகம்,
யாழ்ப்பாணம்.